கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.டி.பன்னீர்செல்வம், எம்.பி.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா.1 நாள்: 23.09.2021

அமர்வு வழக்கு எண். 15/2021

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலியமூர்த்தி | த/பெ | ராமையன் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் கொற்கை மாரியம்மன் கோவில் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் டைலரிங் வேலை பாத்துவருகிறேன். வழக்கு சம்பந்தமாக நான்தான் புகார் கொடுத்தேன். எனது மகன் கார்த்தியை ஆஜர் எதிரிகள் இருவரும் அடித்து கொன்றுவிட்டதாக நான்தான் மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊரில் உள்ள முத்துப்பிள்ளையின் விவசாய பன்னையில் மாந்தோப்பு உள்ளது. இறந்து போன எனது மகன் கார்த்தி மாந்தோப்பில் இருந்த மாங்காய்களை ஆஜர் எதிரிகள் திருடியதாக முத்துப்பிள்ளையிடம் இறந்துபோன எனது மகன் கார்த்திக் சொன்னதாக எதிரிகள் கோபப்பட்டார்கள். 24.06.2019 அன்று இரவு 9 மணியளவில் எனது வீட்டிலிருந்து 5 வீடுகள் தள்ளி சேகர் வீட்டு வாசலில் வைத்து அங்கு நின்ற எனது மகனை எதிரிகள் இருவரும் அடித்தார்கள் அதனை வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த என்னிடமும் எனது மனைவியுடம் வந்து சொன்னதால் நாங்கள் ஓடிச்சென்று பார்த்தோம் அப்போது, சேகர் வீட்டு வாசல் அருகே குணசேகரன் என்பவர் எனது மகன் கீழேகிடந்தவரை குணசீலன் எனது மகன் நெஞ்சில் காலல் மிதித்தார். நான் ஓடிப்போய் குணசீலனிடம் ஏன்டா இப்படி செய்கிறாய் எனது மகன் என்னடா செய்தான் என்று கேட்டேன். அப்போது, எதிரி மணிவாசகம் என்னை உதைத்து தள்ளினார் அப்போது அங்கு ஜனங்கள் கூடிவிட்டார்கள் ஜனங்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள் எனது மருமகள் குணசுந்தரி வந்தஉடன் ஆஜர் எதிரிகள் இருவரும் குணசுந்தரியை பார்த்து குச்சிக்காரி மகளே, தேவடியா மகளே என்று சொல்லி எனது மருமகளை எதிரிகள் தள்ளிவிட்டார்கள். அப்போது, எதிரிகள் இருவரும் நாங்கள்தான் கார்த்திக்கை கொலைசெய்ய முடிவு செய்து வந்துள்ளோம் என்று கத்தினார்கள். உடனே

ஆம்புலன்ஸ்வர தாமதமானதால் ஒரு காரை பிடித்து எனது மகனை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்தோம். டாக்சியில் செல்லும் வழயில் எனது மகனின் மூச்சு நின்றுவிட்டது. நாங்கள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதும் அங்கு பரிசோதித்த மருத்துவர் எனது மகன் கார்த்திசிகிச்சைக்கு வரும் வழியிலேயே இறந்து விட்டதாக சொன்னார்கள் உடன் எனது மகனின் உடலை பிணவறையில் வைத்துவிட்டார்கள். நான், எனது மகனின் இறப்பு குறித்து நடவடிக்கை எடுக்கக்கூறி மணல்மேடு காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுதான். அந்த புகார் மனு அ.ஆ.1 ஆகும். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள கருப்புகலரில் வெளிர் வெள்ளை நிற ஸ்டிக்கர் ஒட்டப்பட் Hero Honda இருசக்கர் வாகனம் எதிரிகள் வழக்கு சம்பவ சமயம் எதிரிகள் வந்த இருசக்கர வாகனம் ஆகும். அந்த இருசக்கர் வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனைக்கு பிறகு எனது மகனின் உடலைப் பெற்று நல்லடக்கம் செய்தோம். காவல் ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

இல்லை.